மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொழிப்புரைதான் சொல்ல முடியும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பாம்பன் பாலம்.

*கு. கா. வி. எண் 8—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பாம்பன் பாலம் எப்பொழுது கட்ட ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) இப்பொழுது என்ன நிலைமையில் இருக்கிறது?

(ஈ) தொடர்ந்து வேலை நடக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) பாம்பன்பாலம் 17—11—1974 அன்று கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 532·87 இலட்சங்களாகும்.

(இ) பால வேலை இதுகாறும் 36 சதவிகித அளவிற்கு முடிவு பெற்றுள்ளது.

(ஈ) தற்பொழுது வேலை நடைபெறவில்லை. ஒப்பந்தக்காரர்கள் ஜூலை 1979 முதல் வேலையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டிலிருந்து இந்த வேலை நிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? அது யாருடைய தவறு? அரசு இதனைத் தொடர்ந்து நடத்துமா? இங்கிருந்து இலங்கைக்குப் பத்து மைல் தூரம்தான். எனவே, தமிழ்நாட்டிற்கும், இலங்கைக்கும் இணைப்புப் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால வேலை கடந்த 17—11—1974 அன்று ஆரம்பிக்கப்பட்டு, கடந்த நான்காண்டுகளுக்குள் அதாவது 16—11—1978-க்குள் முடிப்பதாக ஒப்பந்தம் முடிவாகியது.

1980 ஜூலை 8]

அதன்படி முடிவு அடையாமல் கடந்த 1979- லேயிருந்து தேக்கம் ஏற்பட்டு நிறுத்தப்பட்டிருப்பதனுடைய காரணமெல்லாம் கடந்த 24—11—1978- லே மண்டபம் பகுதியைத் தாக்கிய புயல் காரணமாகப் பால வேலை செய்வதற்கு அத்தியாவசிய மாக ஒப்பந்தக்காரர்களினால் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டு மான வேலைகளும், மற்றும் அவர்களுக்குச் சொந்தம் ஆகிய பால வேலையின் உபயோகத்தில் இருந்த இயந்திரங்களும், தள வாடங்களும் சேதத்திற்கும் இழப்புக்கும் உள்ளாகியது. புய லின் காரணமாக ஏற்பட்ட சேதத்திற்கும் இழப்பிற்கும் நஷ்ட யீட்டுத் தொகையாக ரூ. 20·66 இலட்சங்கள், மற்றும் இதர கூடு தல் செலவுகளும் அவர்கள் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளனர். அப்படிக் கூடுதல் செலவு என்கின்ற அடிப்படையிலே அவர் களுக்கு நாம் நஷ்டயீட்டுத் தொகை கொடுப்பது என்று சொன்னால் மிகப்பெரிய தவிர்க்க முடியாத இடையூறு ஏற்பட் டால் ஒழிய அந்த நஷ்டயீட்டுத் தொகை கொடுக்க முடியாத தாக இருக்கிறது. ஆகவேதான் அரசு பரிசீலனை செய்து கடந்த 1964- லே ஏற்பட்ட புயலையும், 1978- லே ஏற்பட்ட புய லையும் ஒப்புநோக்கி பார்த்துத்தான் இவைகளையெல்லாம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின் றோம். ஆகவே, அட்வகேட்-ஜெனரலுக்கு—தலைமை வழக் கறிஞருக்கு இது குறித்து மறுமுறையும் அனுப்பப்பட இருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, ஒப் பந்தக்காரர்கள் நஷ்டயீடு எவ்வளவு கோரியிருக்கிறார்கள்? அதற்கு என்ன வழிவகையை அரசு செய்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல ரூ. 20·66 இலட்சங்களும் அதற்குமேல் கூடுதல் செலவுகளும் அவர்கள் கேட் டிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் இலங் கைக்கு இணைப்புப் பாலம் போடுவது பற்றிக் கேட்டிருக்கி றார்கள். இணைப்புப் பாலம் பற்றிக் கவலையில்லை. ஆனாலும் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டு மே தவிர மாநில அரசு முடிவு செய்ய முடியாது. இது இரு நாடுகளுக்கு இருக்கின்ற பிரச்னையாக இருப்பதால் கட்டுகின்ற இணைப்புப் பாலம் இக்கட்டான பாலமாக அமைந்து விடக் கூடாது என்பதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறோம்.

திரு செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் 1978-லே புயலால் பாதிக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நஷ்ட ஈடு கிட்டத்தட்ட ரூ. 22 இலட்சத்திற்குக் கொடுத்தால்தான்

நான் வேலை செய்வேன் என்று அந்த நீலகண்டன் பிரதர்ஸ் என்ற காண்ட்ராக்டர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதைக் கொடுக்க வேண்டியது மாநில அரசா, மத்திய அரசா? யார் பொறுப்பில் அந்தப்பால வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நஷ்டஈட்டுத் தொகை ரூ. 20·66 இலட்சம். ஆனால், அதற்கு மேலாக அவர்கள் கேட்கிறார்கள். இதரக் கூடுதல் செலவு என்கிற அடிப்படையிலே அவர்கள் கேட்கிறார்கள். ஆனால், கூடுதல் செலவு கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அது excepted risk தவிர்க்க முடியாத ஒரு இடையூறாக இருந்தாலொழிய அந்தக் கூடுதல் செலவைக் கொடுக்க முடியாது. மேலும் ஒப்பந்தக்காரர்கள் இன்ஷூரன்ஸ் செய்திருக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளியிலே ஏற்கெனவே ரூ. 6 இலட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளி அடிப்படையிலே அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்யாத காரணத்தாலே, அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை இன்னும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல், அந்தப் பிரச்னையை முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசு தானே ஒழிய மாநில அரசு அல்ல.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாம்பன் பாலம் கட்ட ஒப்பந்தம் செய்த ஒப்பந்தக்காரர் யார்? எவ்வளவு தொகைக்கு முன்பு ஒப்பந்தம் செய்யப்பட்டது? திருத்தப்பட்ட பிறகு எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது? எவ்வளவு வேலை நடைபெற்றது? எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, திருவாளர்கள் நீலகண்டன் பிரதர்ஸ் என்கின்ற ஒப்பந்தக்காரர்கள்தான் அந்த வேலையை எடுத்தார்கள். கடந்த 1974 நவம்பர் மாதத்திலே அந்த வேலை துவங்கப்பட்டது. கடந்த 1979 வரையிலும் 36 சத விகிதம் வேலைகள்தான் முடிவடைந்திருக்கின்றன. ஏறத்தாழ ரூ. 221 இலட்சம் ரூபாய்க்குண்டான வேலைகள் முடிவடைந்துள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தப் பாலம் மக்களுக்கு மிக அவசியமாக தேவைப்படுகிறது. அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் நாளுக்கு நாள் அதனுடைய மதிப்பு உயர்ந்துகொண்டே போகும். ஆகவே, அரசாங்கம்

1980 ஜூலை 8]

விரைவாக முடிவெடுத்து, அந்த வேலையை விரைவிலே முடிக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த வேலையைச் சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்பதற்காகத் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நான் சொன்னதைப் போல், ஒப்பந்தக்காரர்கள் கூடுதல் செலவு என்கிற அடிப்படையிலே கேட்கிற காரணத்தால், கூடுதல் செலவு இதரச் செலவுகள் என்கிற அடிப்படையிலே ஏறத்தாழ கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுக்க வேண்டி வரும். கோடிக்கணக்கான ரூபாய்களை, excepted risk தவிர்க்க முடியாத இடையூறாக இருந்தாலொழிய கொடுக்க முடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, 1964-லே ஏற்பட்ட புயலையும் 1978-லே ஏற்பட்ட புயலையும் கணக்கிலே கொண்டுதான் இந்தத் தொகையை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இராமேஸ்வரம் இந்தியாவிலே முக்கியமான ஷேத்திரம் என்கிற வகையிலே நாட்டுமக்கள் அங்கே வசதியாக, கார் மூலம் செல்ல வசதியாக இந்தப் பாலம் அமைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது பாதிக் கிணறு தாண்டியதைப் போல, பாதிக் கடல் தாண்டியிருக்கிறது. அதை முழுமையாக பூர்த்தி செய்யாவிட்டால் பல கோடி ரூபாய் விரயமாகும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, சட்டரீதியாக என்ன சிக்கல் இருந்தாலும் அதைத் தீர்த்து வேலையைத் துவக்கி முடித்து வைக்க இந்த அரசு வற்புறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக் கடல் கூட அல்ல. மூன்றில் ஒரு பங்குதான் முடிவடைந்திருக்கிறது. ஆகவே, அதற்கான உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். ஆனால் அவர்கள் திரும்பவும் தலைமை வழக்கறிஞர் நியமிக்கப்பட்டவுடன், அவரைக் கலந்து, இவ்வரசின் கருத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒருவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, பொதுப் பணித் துறையே அந்தப் பணியினை ஏற்று நடத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

[1980 ஜூலை 8

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கக்கூடிய ஒப்பந்தக்காரருடைய ஒப்பந்தம் என்ன ஆவது என்கிற பிரச்னைதான் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

[முற்பகல் 9-10]

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே லேபர் கான்ட்ராக்ட் கோவாபரேடிவ் சொசைட்டி என்று 3 சொசைட்டிகள் இருக்கின்றன. அவைகள் நல்ல முறையிலே நடைபெறுகின்றன என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. இந்த வேலையை அப்படிப்பட்டவர்களிடம் கொடுத்துச்செய்யும்படி சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும். அல்லது அரசாங்கமே இந்த வேலையை எடுத்து நடத்தினால் கோடிக்கணக்கான ரூபாய்கள் தனிப்பட்டவர்களுக்குப் போய் சேராமல் தடுக்க வாய்ப்பிருக்கிறது. இதை அரசு பரிசீலிக்க முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தமாகும். 1974-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே ஏற்பட்ட ஒப்பந்தம். ஆகவே புதிதாக இப்படிப்பட்ட ஒப்பந்தம் இருக்குமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், இன்றைய தினம் ஆளும் கட்சியினுடைய பொதுச் செயலாளராக ஆகியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் பாம்பன் பாலத்தின் ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் உரிமை மாநில அரசுக்கு இருந்ததா அல்லது மத்திய அரசுக்கு இருந்ததா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது முழுமையாக மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வருகிறது இது 49-நெடுஞ்சாலை என்று மண்டபத்தின் அருகாமையில் இருக்கக்கூடிய பாலம். ஆகவே இது முழுக்க முழுக்க மத்திய அரசின் பட்டியலிலே இருக்கிறது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்துக்கும், மண்டபத்திற்கும் இடையே கட்டப்படுகின்ற இந்தப் பாலம் தவிர்க்கப்பட்டாலும், புண்ணியஸ்தலமான

[1980 ஜூலை 8]

தனுஷ்கோடிக்கு சாலைகள் அமைத்து, அந்த இடத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒப்பந்தம் போடப்பட்டு, கட்டப்படவேண்டிய பாலமே மூன்றில் ஒரு பங்கு வேலையோடு நிறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 54-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருவார்.

உ. தகவல் கோரல்.

(அ) கேரள நதிநீர் பங்கீடு.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மேற்குப் பக்கமாக போகின்ற நதிகளின் நீரை தமிழகத்திற்குக் கொடுப்பதைப் பற்றி நேற்று கேரளாவில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி ஏதாவது பேசுகிறீர்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ள பிரச்சினையை முடித்துவிட்டு, அடுத்த பிரச்சினைக்கு வரலாம்.

பேரவை விதி 54-இன் கீழ் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம், கே. எம். தங்கமணி, இ. முத்துராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். திரு. மு. அம்பிகாபதி.

(ஆ) பேரவையில் ஒலிபெருக்கி வசதி.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னால் என்னுடைய முதல் வேண்டுகோளாக உங்களிடம் கொண்டு